
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1188**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

**113**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

## ஒரே வர்ணமாகிவிடுவோம்!

‘வட ஆற்காடு ஜில்லா முதலாவது திராவிடர் கழக மாநாடு’ 9.12.1945 அன்று திருவத்திபுரத்தில் நடைபெற்றது. அன்று காலையில், காட்பாடி வந்தடைந்த பெரியார், வேலூரில் திருநாவுக்கரசு என்பவர் இல்லத்தில் காலை உணவை முடித்துவிட்டு, பேருந்தில் திருவத்திபுரம் வந்தடைந்தார். பெரியார் வந்த பேருந்து ஆற்காடு வந்தடைந்ததும், முஸ்லிம் லீக் கட்சியினர் மாலை சூட்டி வரவேற்று, சிற்றுண்டி வழங்கினர்.

மாநாட்டுத் தலைவர் டி.பி.வேதாசலத்தையும் பெரியாரையும் குதிரை சாரட்டில் அமர வைத்து, கருப்புச்சட்டைத் தொண்டர்கள் அணிவகுக்க, காலை 9 மணிக்கு ஊர்வலம் புறப்பட்டது. பின்னால், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் அணிவகுத்தனர். ஊர்வலத்தின் முன்னால் யானைகள் சென்றன. பலவித வாத்தியங்கள் வாசிக்கப்பட்டு, விழாக்கோலமாகக் காட்சியளித்தது. வாழ்த்தொலிகள் விண்ணைப் பிளந்தன. வழியெங்கும் கருப்புத் துணிகளும் மாலைகளும் சூட்டப்பட்டன. ஒவ்வொரு தெருவிலும் குளிர்பானங்கள் கொடுத்து வரவேற்புகள் நீண்டன. காலை 9.30 மணிக்குத் தொடங்கிய ஊர்வலம் முக்கிய வீதிகள் வழியாகச் சென்று, மாநாட்டுப் பந்தலை அடைய 11 மணி ஆனது.

11.15 மணிக்கு மாநாடு தொடங்கியவுடன் சிலர் பாடல்களைப் பாடினர். கோவிந்தன் என்பவர் வரவேற்புரையாற்றி, கொடியேற்றி வைக்க பெரியாரை அழைத்தார். அப்போது திராவிடர் கழகத்துக்கு என தனிக்கொடி வடிவமைக்கப்படாமல் இருந்த நிலையில், தராசுக்கொடியை ஏற்றிவைத்து, நீண்டதொரு விளக்கம் அளித்தார் பெரியார்.

“தோழர்களே! நீங்கள் என்னை கொடி யேற்றும்படி கேட்டிருக்கிறீர்கள். அதற்காக நன்றி செலுத்த முடியாது. நாம் கொடியைப் பற்றி இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. இப்போதுள்ள கொடி, நம் நோக்கத்திற்கு உகந்ததாக இல்லை. கொடி பற்றி நம்மில் பல பல அபிப்பிராயங்கள் இருக்கின்றன. நம் தோழர்கள் கலந்து ஒரு முடிவுக்கு வர வேண்டும். அதுவரை நான் யோசித்து ஜாக்கிரதையாகப் பேசவேண்டும். கொடியென்பது விஞ்ஞான அறிவுடன், நம் லட்சியத்தைக் கிளப்பும் உணர்ச்சியூட்டும் முறையிலும் இருக்க வேண்டும்” எனக்கூறிய பெரியார், ‘பொதுவுடைமைக் கொடி’, ‘காங்கிரஸ் கொடி’, ‘தமிழ்க்கொடி’, ‘தராசுக்கொடி’ எனப் பல்வேறு கொடிகளின் தன்மை குறித்து நீண்ட விளக்கமளித்தார்.

காலையில் ஊர்வலம் வரும் வழியில்,

ஓவியம் : சிகரன்




சிலர் காங்கிரஸ் கொடியைக் காட்டியதால், சலசலப்பு ஏற்பட்டிருந்தது. அதுகுறித்து, தனது தொண்டர்களுக்கு அறிவுரை வழங்கிய பெரியார், “அவர்கள் கொடிக்குள் புகுந்து போனால் நம் மதிப்பு குறைந்தா போகிறது? அவர்களும் கொடி காட்டி நம்மை வரவேற்கிறார்கள் என்று நாம் கருத வேண்டும். இம்மாதிரி விஷயங்களில் பொறுமையுடனும் பொறுப்புடனும் நடந்துகொள்ள வேண்டும். நம் எதிரிகள் உள்ள இடங்களில் அவர்களுக்கு எதிர்ப்பான கோஷங்கள் போடுவது கூடாது. காலையில் நீங்கள், நான் சொல்லியும் கேளாது, ‘மூவர்ணக்கொடியை ஒழிக’ என்கிறீர்கள். அது சரியல்ல. அது இருந்துவிட்டுப்போகட்டும். நாம் ஒரு வர்ணமாகிவிடலாம்” என்று அப்போதே கருப்புக்கொடிக்கு ஆச்சாரமிட்டார் பெரியார்.

பிறகு, பேராசிரியர் க.அன்பழகன் மாநாட்டைத் திறந்துவைத்து, திராவிட இயக்கக் கொள்கைகளை விளக்கி, நீண்டதொரு சொற்பொழிவாற்றினார். அதற்கடுத்து டி.பி. வேதாச்சலம் தலைமை உரையாற்றினார். திராவிட நாட்டுப் படத்தைத் திறந்துவைத்த அறிஞர் அண்ணா, திராவிடர்களின் நிலைமை குறித்து, 2 மணி நேரம் பேசினார். மதிய உணவுக்குப் பிறகு, அண்ணா தலைமையில் மீண்டும் மாநாடு கூடியது. பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**...கூட்டம் திரளும்**

## இயக்கம் என்றும் நிலைத்து நிற்கும்!

‘தி.மு.க. என்பது பலருக்கு ஒரு தற்காலிகமான ‘வேடந்தாங்கலாக’ இருக்கலாம். வேடந்தாங்கலில் வசந்த காலம் முடிந்ததும், பறவைகள் அங்கிருந்து பறந்துசெல்வது அதன் இயல்பு. அதுபோலவே, ஆதாயம் தேடி வருபவர்கள், காலம் கனியும்போது நகர்ந்து விடுவார்கள்’ என முகநூலில் கருத்துப் பகிர்ந்து, 1937-ஆம் ஆண்டு ‘குடிஅரசு’ இதழில் பேரறிஞர் அண்ணா எழுதியதை மேற்கோள் காட்டி இருக்கிறார், அரசியல் விமர்சகர் விக்னேஷ் ஆனந்த்.

“சமய சஞ்சீவிகள் கூடுவிட்டுக் கூடு பாயக்கூடும். புகழ் மாலை வேண்டுவோர், ‘புதிய தேவதைகளை’ப் பூசிக்கத் தொடங்குவர். ஆதாயம் கிடைக்கப்பெறாதவர், வேறு ‘நாயகனை’ அண்டிப் பிழைக்க எண்ணுவர். ஆனால், இயக்கத்தில் இரண்டறக் கலந்தவர் வேறு இடம் நாடார். வேறு இடங்களில் இருந்து கொடுமைகளைக் கண்டு சகியாது, குமுறிக்கொண்டிருக்கும் பலரை இங்கு இழுக்கவே முற்படுவர். நாம் ஒழிக்க விரும்பும் ஆதிக்கம் சாமான்யமானதல்ல. அந்த வகுப்பார் தமது நிலைமையைப் பாதுகாத்துக்கொள்ள சமூகத்தின் ஜீவநாடிகள் அவ்வளவையும் பிடித்துக்கொண்டே நம்மை ஆட்டிவைக்கின்றனர்” என்று பேரறிஞர் அண்ணா எழுதியதைக் குறிப்பிடும் விக்னேஷ்,

‘பலருக்கு இந்த இயக்கம் உயிர்நாடி. பார்ப்பனர்களிடமிருந்தும் நிலச்சுவான்தாரர்களிடமிருந்தும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, சுயமரியாதையை மீட்டெடுத்துக்கொடுத்த இயக்கம் இது. ஒரு ‘சூத்திரனாக’ அடையாளப்படுத்தப்பட்டவனுக்கு சமத்துவத்தையும் உரிமையையும் பெற்றுத்தந்த நன்றிக்காகவே, இன்றும் பல கோடி பேர் இந்த இயக்கத்தின் வேர்களாகத் தங்கியிருக்கிறார்கள். இந்த இயக்கம் எதற்காக உருவானது என்பதை அறிந்தவர்கள் என்றும் நிலைத்து நிற்பார்கள்’ எனக் குறிப்பிட்டுள்ளார். இயக்கம் என்றும் நிலைத்து நிற்கும், தேர்தல் வெற்றி தோல்விகள், வெளியேறியோர் தாண்டி, இந்த இயக்கம் என்றும் நிலைத்து நிற்கும்; தழைக்கும்.

## ஃப்ளாஷ்பேக்



தாஜ்நூர்



## இசையால் உருவான பயணம்!

திரைப்பட இசை உலகில் எனது பயணம், ‘வம்சம்’ திரைப்படத்தின் மூலம் தொடங்கியது. அது என் முதல் இசையமைப்புப் படம் மட்டுமல்ல; நடிகர் அருள்நிதி முதன்முறையாக ஹீரோவாக நடித்த திரைப்படமும் ஆகும். அந்தப் படத்தின் பாடல் பணிகளின்போது, கலைஞரிடம் டியூன் வாசித்துக் காட்டியது தனித்த அனுபவம். காலை 7 மணிக்கு நடைபெறும் அந்த சந்திப்புகளில், ஒவ்வொரு டியூனையும் கேட்ட பிறகு, அவர் கூறிய கருத்துகள் ஆழமானவை. பாடலின் உணர்வு, வரிகளின் அர்த்தம், மெட்டின் நுட்பம்—அனைத்தையும் மிகத் தெளிவாகப் புரிந்துகொண்டு கருத்துப் பகிர்வார். ‘மன்னாதி மன்னரே’ என்று தொடங்கும் பாடலைக் கேட்டபோது, அதை “கூத்துப் பாட்டு” என்று கலைஞர் குறிப்பிட்டார். இயக்குநர் அதை “குத்துப் பாட்டு” என்று தவறாகப் புரிந்துகொண்டார். உடனே, கலைஞர் அவர்கள் சிரித்தபடி, “நான் குத்துப் பாட்டு என்று சொல்லவில்லை, கூத்துப் பாட்டு என்று சொன்னேன்” என்று திருத்திய தருணம், இன்னும் நினைவில் நிற்கிறது.

**– இசையமைப்பாளர் தாஜ்நூர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

**113**

**சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## மே தினமும் திராவிட இயக்கமும்!

உழைக்கும் மக்களின் உன்னத தினமான மே தினத்தை முதன்முதலில் தமிழ்நாட்டிலே கொண்டாடிய கட்சி, தந்தை பெரியாரின் சுயமரியாதைக் கட்சிதான். இந்த மே தினக் கொண்டாட்டத்திற்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் நீண்ட நெடிய வரலாற்றுத் தொடர்பு இருந்தாலும், தமிழ்ச்சூழலில் மக்களிடையே இந்தக் கொண்டாட்டத்தின் அவசியத்தைப் பரவலாக்கியதில் திராவிட இயக்கத்தின் பங்கு அளப்பரியது.

பாட்டாளி வர்க்க நலன்களுடன்- பகுத்தறிவையும்-தன்மான உணர்வையும் இணைத்துக் கொண்டு, பேரறிஞர் அண்ணா, திராவிடர் கழகத்தில் பொதுச்செயலாளராக இருந்தபோது எழுதிய நூல், ‘மே தினம்’. அக்காலத்தில் திராவிடப் பண்ணை வெளியீடாக இந்நூல் வெளிவந்தது. 1985-ஆம் ஆண்டு, இந்த சிறப்பு மிக்க நூலின் ஐந்தாம் பதிப்பை, ‘பாரி நிலையம்’ வெளியிட்டது.




மே தினம் எங்கு, எப்படி உருவானது? உழைக்கும் மக்கள் அதைக் கொண்டாட வேண்டியதன் அவசியம் என்ன? தமிழ்நாட்டில் முதலாளி-தொழிலாளி என்பது வெறும் பொருளியல் தொடர்புடைய பேதமாக இல்லாமல், சமுதாய ஏற்றத்தாழ்வுகளையும் உள்ளடக்கிய ஒன்றாக இருப்பதை, பேரறிஞர் அண்ணா இந்நூலில் பிரதான கருவாகக் கையாண்டுள்ளார்.

மே தினத்தை வெறும் கம்யூனிஸ்ட் கட்சி கொண்டாடும் விழாவாகக் கருதாமல், திராவிட இன மக்கள் உரிமையுடனும் உவகையுடனும் கொண்டாட வேண்டியதன் அவசியத்தை, இந்நூலில் கவனப்படுத்துகிறார்.

“கொடுமைகளைக் கண்டு அஞ்சா நெஞ்சமும், பயங்கர அடக்குமுறை கண்டும் பணிய மறுக்கும் உரமும், வாட்டிவதைக்கும் எதேச்சாதிகாரத்தின் முன்பு வளையாத போக்கும் பெற, மே தின விழாவைப் பாசறைப் பள்ளியாக்கிக்கொண்டனர், ரஷியப் பாட்டாளி மக்கள்!” என்று மே தினத்தன்று, வரலாறு நெடுக நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளைக் கவனப்படுத்தி, தமிழ்நாட்டில் நிலவும் முக்கியப் பிரச்சனையை, மே தினத்தன்று மக்களுக்கு நினைவூட்ட வேண்டியது திராவிட இயக்கத் தோழர்களின் கடமை என்றும் விளிக்கிறார்.

பாட்டாளிகளின் பிரச்சினையிலே மற்றவர்கள் கவனிக்கத் தவறிய, ஆனால், முக்கியமான பகுதியை வலியுறுத்தும் அண்ணா, ‘பூர்ஷுவா’ என்பதற்குப் பதில், நாட்டு நிலையைக் கவனித்து, ‘ஆரியன்’ என்ற பதத்தையும்; ‘புரோலோடேரியன்’ என்பதற்குப் பதில் ‘திராவிடர்’ என்ற பதத்தையும் கையாண்டு, அதற்கான நியாயமான காரணங்களையும் சுட்டிக்காட்டுகிறார். இந்த இரண்டு வர்க்கங்களுக்கு இடையிலான போராட்டம்தான், ‘ஆரிய-திராவிடப் போராட்டம்’ என்றும் தெளிவுபடுத்துகிறார்.

> **“சிந்தனையைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என்று அண்ணா சொன்னதை, ஒவ்வொரு மே தினத்தன்றும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.”**

கைலாயத்தை நோக்கும் பாட்டாளிகளின் கண்ணை, காரல் மார்க்ஸைப் பார்க்கச் செய்வதே நமது பணி என்பதை உறுதியாக உரைத்து, “மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ, நம் குறிக்கோள் குன்றாதிருக்க, உழைப்பாளி உண்டு களிக்க, உலுத்தர் ஒழிய; ஆண்டவன் பேரால் ஆபாசம், அநீதி, சுரண்டல் சூது நடவாதிருக்க, ஆரியனின் ஆத்மார்த்தத்தினின்றும் வடநாட்டு வாணிபப்பிடியினின்றும் விலகி, மனிதர் மனிதர்களாய் வாழ” சிந்தனையைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்” என்று அண்ணா சொன்னதை, ஒவ்வொரு மே தினத்தன்றும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

**...வாசிப்போம்.**

## கருவூலம்

### பெண்களுக்கு 30 சதவிகித ஒதுக்கீடு!

1989-ஆம் ஆண்டு, மூன்றாவது முறையாகக் கழக ஆட்சி பொறுப்பேற்றபோது, தேர்தல் அறிக்கையில் அறிவிக்காத பல திட்டங்களை நிறைவேற்றும் அறிவிப்பினைப் பேரவையில் வெளியிட்டார் கலைஞர். அதில் ஒன்றுதான் அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30 சதவிகித ஒதுக்கீடு செய்யும் திட்டம். இந்தியாவிலேயே இந்த ஒதுக்கீட்டைக் கொண்டுவந்த முதல் மாநிலம் தமிழ்நாடு.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900